புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=====================================================================

# பச்சைகுத்துதல் – தொய்யில் – டாட்டூ பரிணாமமும் வளர்ச்சியும்

முனைவர் த. பூவைசுப்பிரமணியன்
தமிழ்ப் பயிற்றுனர், எம்.ஐ.டி. வளாகம் குரோம்பேட்டை
அண்ணா பல்கலைக்கழகபல்கலைக்கழகம், சென்னை

=====================================================================

தொல் தமிழ் மாந்தன் பல்வேறு வாழ்வியல் சூழலுக்கிடையில் தன் உடல் நலத்திலும் கவனத்தைச் செலுத்தினான். உடலை கலை வடிவமாக மாற்றவும் ஆர்வம் காட்டினான். சங்ககாலப் பெண்டிர் தங்களை அழகூட்டுவதில் அதிக ஆர்வம் கொண்டிருந்ததை ஐந்திணைப் பாடல்களும் சான்றிடுகின்றன. ஐந்திணை மலர்களையும் சூடி அழகுபார்த்த தலைவியினரையும் நிலத்தில் நெல்லிற்கு இடையில் களையாக வளர்ந்த மலர்களைப் பிடுங்கி எறிய மனமில்லாமல் தங்கள் கூந்தலில் சூடி அழகுபார்த்த மருதநிலப் பெண்களையும் பாடல்கள் சுட்டுகின்றன. இதோடு மட்டுமின்றித் தங்கள் உடலில் இயற்கைக் கலவைகொண்டு தொய்யில் வரைந்து உடல் உறுப்புக்களைக் கண்டு மகிழ்ச்சிகொள்ளும் பெண்களும் சங்கப் பாடல்களில் மிகுதியாகப் படைக்கப்பட்டுள்ளனர். இத்தகைய தொய்யில் கலை வடிவமானது ஒரு குறிப்பிட்ட இனக்குழுச் சமூகத்தின் தொழில் முறையாகத் தோன்றி சங்க காலத்தில் தொய்யிலாக உருமாறி பின்னர் உலகம் முழுவதும் வயது வித்தியாசமின்றி பூசிக்கொள்ளும் டாட்டூ கலையாக மாறியது. பச்சைகுத்துதல், தொய்யில், டாட்டூவின் சமூகக் கலைவடிவ பரிணாம வளர்ச்சி மாற்றங்களை உலகமயமாக்கல் சூழலில் இவ்வரைவு விவாதிக்கிறது.

## இனக்குழு

தமிழ் நிலம் ஐந்து திணைகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு திணைக்கும் முதற், கரு, உரி என வேறுபடுத்தப்பட்டிருந்தது. மலை நிலமான குறிஞ்சியில் வாழ்ந்த இனக்குழுமக்கள் அந்நிலத்தில் கிடைக்கப்பெறும் வளத்தினைக்கொண்டு தங்களது வாழ்வியல் முறைகளைத் தகவமைத்துக்கொண்டனர். இம் மலை நிலத்தில் வாழ்ந்த மக்களை இனவியலார் மற்றும் மானிடவியலார் பழங்குடியினர்/ குறவர் எனும் அடையாளங்கொண்டே ஆராய்கின்றனர். சிற்றிலக்கியக் காலத்தில்தான் குறவர் எனும் பெயர் பரவலாக்கம் பெறுகிறது. தனித்த இலக்கிய வகையாகவும் தோற்றம் பெறுகிறது. இக் குறவஞ்சி இலக்கியமானது மண்ணையும், அம்மண்ணில் வாழும் கடவுளர், புகழ்பெற்ற தலைவர்களைப் பற்றி குறிசொல்லியபின் அதற்குரியக் கூலியைப் பெற்றுச்செல்லும் நிலையில் குறவர் மக்களின் தொழில் நிலை அமைந்திருந்தது. குறவர் சமூகப்பெண்கள் குறிசொல்வதோடு மட்டுமின்றி உடலில் பச்சைகுத்துதல் தொழிலையும் செய்துவந்தனர். கோவைக்கு அருகில் சில இடங்களில் உப்பிலியக் குறவரில் ஆடவரும் பச்சைகுத்தும் தொழில் செய்து வருவதாக அறியப்படுகிறது. தோடர் இனப்பெண்கள் பச்சைகுத்துதலைத் தொழிலாகச் செய்து வருகின்றனர். தென்னிந்திய மக்களை ஆய்வுசெய்த எட்கர் தர்ஸ்டன், 'குறவர் சாதியினைச் சேர்ந்த பெண்கள் பச்சை குத்துவதை மேற்கொண்டு வருமானம் தேடுவர். இந்தத் தொழில் காரணமாக இவர்கள் பச்சை குத்தி எனவும் அழைக்கப்படுகின்றனர். நான் நேரில் பேட்டிகண்ட குறத்தி ஒருத்தி தான் பச்சை குத்துவதற்கு உதவும் முன் வரைவுகளை ஒரு சுவடியில் எழுதி வைத்துக்கொண்டிருந்தாள். அதில் மீன், தேள், கோட்டை, ஐந்துமாடி வீடு மற்றும் வழக்கமான உருவமைப்புகள் முதலியன இடம்பெற்றிருந்தன. உடம்பின் மேற்பகுதி முழுவதிலும் நான்கைந்து அமர்வுகளில் பச்சைகுத்தி முடிக்க ஒரு குறத்திக்கு எட்டு முதல் பன்னிரண்டு அணா வரையோ, அதற்கு ஈடான தானியங்களோ தருவர். பச்சைகுத்த குளிர்காலத்தை விட கோடைகாலமே ஏற்ற பருவமாகக் கருதப்படுகிறது'.[1] திருநெல்வேலி

*மாவட்டத்தின் தென்காசி சுற்றுவட்டாரங்களில் வாழும் காட்டு நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்த நரிக்குறவர்கள் பச்சைகுத்துதலைத் தம் குலத் தொழிலாகச் செய்து வருகின்றனர். குறிஞ்சி இனக்குழு மக்களின் தொழிலானது விரிவடைந்து மற்ற திணை மக்களிடத்திலும் தொய்யில் கலையாக மாறியுள்ளதை பின்வருமாறு அறியலாம்.*

*தொய்யில் எனும் சொல்*

*தொய்யில் எனும் சொல்லானது தமிழர்களின் புழக்கத்தில் இருந்துள்ளதேயாகும். கிராமங்களில் இச்சொல்லானது மிகுதிப் பயன்பாட்டில் இருந்துள்ளது. சிறுதானியங்களான கம்பு, சோளம், வரகு, கேழ்வரகு, சாமை முதலிய புன்செய் தானியத்தை அப்படியே சமைத்து உண்ண இயலாது. அதனை உரலில் இட்டு நன்கு இடித்துத் தொலி என்று சொல்லக்கூடிய மேற்பகுதியினை நீக்கியப் பின்னரே உணவாகப் பயன்படுத்த இயலும். இம் மேற்பகுதியினை நீக்குவதற்குத்தான் துவைத்தல்/ தொவைதல் என்று கிராமத்தார் குறிப்பிடுவர். ஒன்றை அழித்து அதிலிருந்து மீட்டுருவாக்கம் செய்தல் என்று சொல்லலாம். உணவோடு சேர்த்து உண்ணும் துவையலையும் இதனோடு சேர்க்கலாம். 'தொய்யில் என்னும் சொல் தொய்யில் என்னும் நீர்க்கொடியைக் குறிப்பதாகக் கருதுபவரும் உண்டு. ஆனால் நீர்க்கொடி என்று கூறுதல் பிழையாகும். தொய்யில் என்பது தற்பொழுது தொவையில், தொவையல் என்னும் சாந்து போன்றக் கலவையைக் குறிக்கும் சொல்லாகப் புழக்கத்தில் பயின்று வருகிறது'[2] என இராசு. பவுன்துரை விளக்கமளிக்கிறார். பச்சைக்குத்துதலுக்கீடான ஆங்கிலச்சொல் Tattoing இது பாலினீசிய மொழிச்சொல்[3] பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை ஆங்கில மொழியில் இச்சொல் இடம்பெறவில்லை. ஸ்பானியக் கடலோடிகள் Pintado என்ற சொல்லைப் பயன்படுத்தியதாக ஹம்ப்லி கருதுகிறார். இச்சொல்லுக்கு வண்ணம் பூசிய அல்லது வடிவம் தீட்டிய என்று பொருள்[4] இருப்பினும் தொய்யில் என்பது கலவை,சாந்து என்பதாகவே இச்சொல் உருவாக்கம் பெற்றுள்ளது என்பது எண்ணத்தக்கது.*

*அறிஞர்கள்*

*தமிழர்களின் பண்பாட்டுக் கலைமரபாகக் கருதப்படும் தொய்யிலைப் பற்றி மிகுதியான ஆய்வுகள் வரப்பெறவில்லையாயினும் அது குறித்தச் சிந்தனையோட்டம் தமிழறிஞர்களிடையே இருந்துவந்துள்ளது. தொய்யிலை இனக்குழு ஆய்வாகவும் (Ethno Studies); மானிடவியல் ஆய்வாகவும் (Anthropology) ஆராய வேண்டியத் தேவையும் உள்ளது. பேராசிரியர்களான ஆ. சிவசுப்பிரமணியன், தொ. பரமசிவம், இ. முத்தையா, ஒ. முத்தையா, ஆ. தனஞ்செயன், ஆ. தட்சிணாமூர்த்தி, இராசு. பவுன்துரை கிளார்க்கென்னத், ப்பிரேசர்,டெய்லர் போன்றோர் நாட்டுப்புறவியல், இலக்கியவியல் அடிப்படையில் சிந்தித்துள்ளனர்.*

*தொய்யில் கலவை*

*தொய்யில் கலவையானது காலத்திற்குத் தக்கவாறு உருவாக்கப்பட்டு வந்துள்ளது. மஞ்சள் பொடியுடன் அகத்திக்கீரை சேர்த்து அரைத்து ஒரு துணியில் கட்டி, தீயிட்டு எரித்துக் கரியாக்கிக் கலவையாகப் பயன்படுத்தும் பழக்கம் கிராமங்களில் இருந்து வருகின்றது. இக் கலவையினைச் சாந்தாக மாற்றி கூர்மையான ஊசி கொண்டு விரும்பும் உருவத்தை வரையும் மரபு உள்ளது. 'பூச்சுப் பொருட்கள் குழம்பு, சந்தனம், அகில், குங்குமம் எனப் பல்வேறு கலவைகள் தயாரிக்கப்பட்டன. சந்தனக் கட்டையைத் தேய்த்து அத்துடன் பச்சைக் கருப்பூரம் கலந்த குழம்பும், சாதிலிங்கம் நானப்பொடி முதலிய கலந்து குழைத்தக் குங்குமக் குழம்பிலும், தீயிட் சுட்டு உருவாக்கிய அகிழ் குழம்பில் குழைந்துக் கலந்த வண்ணம் கத்தூரி ஆகியவை கலவையாக உருவாக்கினர்'[5] மணப்பொருட்களைக் கொண்டுத் தொய்யில் கலவையை உருவாக்கிப் பயன்படுத்தியுள்ளதை அறிய முடிகிறது.*

*............. திருந்திழைத்*
*தொய்யில் வனமுலை வனப்பு இழப்பப் (நற். 225: 6-7)*

*இயற்கையழகு கொண்ட வரிபடர்ந்த இளமார்பினை மேலும் அழகுபெறும் பொருட்டுத் தலைவியானவள் தோளிலும் மார்பிலும், செம்பஞ்சுக் குழம்பினைப் பூசிக்கொண்டாள் எனப் பாடல் குறிப்பிடுகிறது. அழகிற்காகவும் நறுமணத்திற்காகவும் தொய்யில் கலவையினை மகளிர் பயன்படுத்தியுள்ளனர்.*

*தொய்யில் பொறித்த வனமுலை வான் கோட்டு (கலித். 97: 12)*

*தலைவியின் மார்பில் வெண்மை நிறத்தாலானச் சாந்துகொண்டுத் தலைவன் சித்திரம் வரைந்தான். தொய்யில் கலை குறித்துச் சங்க இலக்கியங்களில் கலித்தொகையில் மட்டும் 'பதின்மூன்று'[6] இடங்களில் மிகுதிக் குறிப்பு உள்ளது. இதில் தலைவன் தலைவியினிடையே நடைபெறும் உரையாடலானது நாடகப்பாங்குடன் செய்திகள் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். ஆண்கள் தொய்யில் வரைந்த செய்தி மிகுதிப்பட்டுள்ளது. ஆனால் தொய்யில் வரையும் பெண்களை தொய்யில் மகளிர், வண்ண மகளிர் எனப் பெயர்கொண்டு அழைத்தாலும் நிகழ்ந்திருக்கிறது.*

*நல்இள வனமுலை அல்லியொடு அப்பியும்*
*பெருந்தோள் தொய்யில் வரித்தும் சிறுபரட்டு (அகம்.389:4-5)*

*இப்பாடலில் தலைவனே தலைவியின் உடலில் தொய்யில் வரைந்து அழகூட்டிகிறான். மலர்களின் பூந்தாதுகளை அழகிய மார்பில் ஒட்டிவைத்தும் தொள்களில் கோலமிட்டும் தம் கற்பனைக்குத் தக்கவாறுத் தலைவியை அழகூட்டினான். 'திருமணம் ஆகாத பெண்கள் மார்பிலும் தோளிலும் சந்தனம், செம்பஞ்சுக்குழம்பு ஆகியவற்றால் கரும்பு வல்லிக்கொடி, பூ, இலை, தளிர் ஆகிய கோலங்களைப் புனைந்து கொள்ளுவர். தலைவனே இக்கோலம் செய்தலும் உண்டு'[7] இதன் மூலம் சங்க காலத்தில் திருமணம் ஆகாத பெண்கள்தான் தொய்யில் வரைவதற்குத் தகுதியுடையோர் எனும் எல்லை இருந்துள்ளதையும் களவு காலத்தில் தலைவனே தொய்யில் வரைந்தான் என்பதையும் அறியமுடிகிறது.*

*பேய்கரும்பு ஈர்க்கவும் வல்லன் இளமுலைமேல்*
*தொய்யில் எழுதவும் வல்லன் (கலித். 143:33-34)*

*தலைவன் தலைவியின் மெல்லியத் தோளின்மீது கரும்பைச் சித்திரமாக வரைந்துள்ளான் என்பதையும் இளம் மார்பின்மேல் வண்ணக் கலவையினால் கொடி வரைந்துள்ளதையும் பாடல் குறிப்பிடுகிறது. தலைவியின் தோள், மார்பு இரண்டும் தொய்யில் வரையும் இடங்களாகப் பாடல்கள் சுட்டுகின்றன. களவின் அடையாளமாகக் கரும்பும், கொடியும் பார்க்கப்பட்டது. சிலம்பும் இச்செய்தியினைப் பதிவுசெய்துள்ளது.*

*வேய்தோட் கரும்பெழுதி தொய்யில் செய்து*
*கரும்பும் வல்லியும் பெருந்தோள் எழுதி (சிலம்பு.12)*

*சங்க காலத்தைத் தொடர்ந்து காப்பியக் காலத்திலும் கரும்பும், வல்லிக்கொடியும் களவின் அடையாளங்களாகத் திகழ்ந்தன. களவில் ஈடுபடும் பெண்கள் மட்டுமின்றி விலைமகளிரும் தங்கள் உடலில் தொய்யில் வரைந்திருந்தனர்.*

*தொய்யில் பொறித்த சுணங்கு எதிர்முலை (அகம்.41:6)*

*விலைமகளிர் தேமல் படர்ந்த அழகிய மார்புகளில் சித்திரம் வரைந்து இளைஞர்களைக் கவரும் நோக்கில் தம் செயல்பாட்டினை மேற்கொண்டிருந்தது அறியப்படுகிறது.*

*இனக்குழு மக்களின் தொழில்முறைக் கலையாக இருந்து பின்னர் சங்க காலத்தில் தலைவன் தலைவியின் அன்பினைப் பெருக்கும் ஒரு சாதனமாக இருந்ததும் அறியமுடிகிறது. சங்க காலப் பெண்கள் இதில் மிகு ஆர்வம் காட்டினார்கள் என்பதைப் பாடல்கள் நமக்குச் சான்றிடுகின்றன. தமிழனின் மரபுக் கலையானது பச்சைகுத்துதல் எனத் தொடங்கித் தொய்யிலாக வளர்ந்துத் தற்காலத்தில் டாட்டூவாக உருமாறி வணிக மயமாக்கப்பட்ட நிலையினையும் இதில் அறிதல் அவசியமாகின்றது.*

*டாட்டூ (Tattoos)*

*நவீன காலத்தில் இந்த டாட்டூவை பெண்கள் அழகிற்காகவும் அடையாளத்திற்காகவும் வரைந்துகொள்வது நாகரீகமாகியுள்ளது. முற்றிலும் இரசாயனம் கலந்த கலவையினை ஆபத்துப்பாராமல் பயன்படுத்தும் நிகழ்வும் நடந்தேறிவருகிறது. சங்க காலப் பெண்கள் தம் தோள், மார்பு பகுதிகளில் மட்டுமே தொய்யிலை எல்லையாகக் கொண்டு வரைந்திருந்தனர். ஆனால் தற்போது இந்நிலை மாறி தாம் விரும்பும் இடங்களிலெல்லாம் டாட்டூ வரைந்துகொள்ளும் போக்கு உள்ளது. உடல் முழுவதும் டாட்டூ வரைந்து கொள்வதில் நடிகைகள், விளம்பரப் பெண்கள், புகழ்பெற்ற பெண்கள், விளையாட்டு வீராங்கணைகள் இவை போன்று பலதுறைகளைச் சேர்ந்தோர் தனி ஆர்வம் காட்டுகின்றனர். இவர்கள் தாம் விரும்பும் மலர், நட்சத்திரம், மீன் வண்ணத்துப்பூச்சி என மென்மையின் அடையாளங்களை தமது உடலில்*

ஓவியமாக வரைந்து கொண்டுள்ளனர். மேலும் இவர்கள் தாம் விரும்பும் நபர்களின் பெயர்கள், முகங்களைக் கோட்டோவியமாகத் தீட்டிக்கொள்ளும் பழக்கமும் இந்நாகரீக உலகில் நிகழ்ந்தேறி வருகிறது. அண்மையில் திரைப்பட நடிகை தம் படத்தில் உடன் நடிக்கும் நாயகனின் ஓவியத்தை டாட்டூவாக வரைந்து வெளிப்படுத்தியதைச் செய்தி ஊடகங்கள் புகைப்படத்துடன் வெளியிட்டிருந்தன. டாட்டூ வரைந்து கொள்வதில் பெண்கள் மட்டுமல்லாது ஆண்களும் ஆர்வமுடையவர்களாகவே உள்ளனர். தாம் மனதில் கொண்ட பெயர்கள், நடிகர்கள், விளையாட்டு வீரர்கள், அரசியல்வாதிகள், இயக்கத்தலைவர்களின் உருவங்களை உடலில் டாட்டூவாக வயது வித்தியாசமின்றி வரைந்துகொள்கின்றனர். தன் குணத்திற்கேற்றாற் போல பாம்பு, சிங்கம், தேள், டைனோசர், யானை இவைபோன்ற ஏராளமான விலங்கு பறவையினங்களையும் வில் அம்பு, அரிவாள், ஈட்டி போன்ற கூர்மையான ஆயுதங்களையும் டாட்டூவாக தோள்பட்டை, கை, முதுகு, மார்புப் பகுதிகளில் வரைந்து அடையாளமிட்டுக்கொள்கின்றனர்.

வயது வித்தியாசமின்றி டாட்டூவானது மனித மனங்களைக் கவருவதால் மிகப்பெரிய வணிகச் சந்தையினை நிலைநிறுத்தியுள்ளது. உலகில் அதிகமாக வணிகச் சந்தையினைக் கொண்டிருப்பதில் அழகுச்சாதனப் பொருள்களும் இடம்பிடித்துள்ளது. டெல்லியில் மட்டும் உடலில் கண்டபடி டாட்டூ குத்துவதற்கென 100 முதல் 150 கடைகள் இருக்கின்றன. அவற்றில் சுமார் 400 பேர்களுக்கு மேலாகப் பணியாற்றுவதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஒரு டாட்டூவுக்கு ரூபாய் 700 முதல் 2000 வரை வசூலிக்கப்படுகிறது. தமிழகத் தலைநகரிலும் இத்தொழில் சிறப்புற நடைபெறுகிறது. இதேபோல் இந்தியாவின் பெருநகரங்களில் டாட்டூ கடைகள் உள்ளன. டாட்டூவானது அடையாளம், பொழுதுபோக்கு என இரண்டினையும் கொண்டதாக மட்டுமே பார்க்கப்படுகிறது. தமிழகத்தில் பச்சைகுத்துதலை நம்பிக்கைச் சார்ந்த மருத்துவ முறையாகப் பயன்படுத்தி வருகின்றனர். கால்களிலும் பாதங்களிலும் நீர்க்கோவைக் கண்டால், நீர்கட்டிய பாகத்தில் நீர்ப்பச்சை குத்திக்கொண்டால் குத்தப்படும் ஊசிக்குத்து, நீர்க்கோவையை தடுக்கும் என நம்பினர். இதற்கெனக் குத்தப்படும் பச்சை வடிவம் இரட்டை வரிசைகளில் கூட்டல் குறிகளோ பெருக்கல் குறிகளோ கொண்டிருக்கும். அரேபியாவில் ஆடவரும் பெண்டிரும் வாத நோய்களிலிருந்து நலம்பெற பச்சைகுத்திக்கொள்கிறார்கள்.[8] உடலில் வெளிப்பாகத்தில் பச்சைகுத்திக்கொண்டால் தீ ஆவிகள் இக்குறிகளைக் கொண்டு அஞ்சி ஓடிவிடும் எனும் நம்பிக்கையும் தமிழக மக்களிடம் இருந்து வருகிறது. ஜப்பானியரின் அக்குபஞ்சர் மருத்துவ முறையோடு இவ் டாட்டூ எனும் பச்சைகுத்துதலைத் தொடர்புபடுத்துகின்றனர். இறுதியாக இனக்குழு மக்களின் தொழிலாகத் தொடங்கி சங்க காலத் தமிழன் தன் இணைமீது கொண்ட தீராத அன்பினை வெளிப்படுத்தும் கருவியாகத் தொய்யிலைப் பயன்படுத்தினான். பின்னர் இதுவே மேலை நாடுகளுக்குப் பயணமேற்பட்டு டாட்டூ எனும் புதுப்பெயர்/வணிகப் பெயர் கொண்டு வயது வித்தியாசமின்றிச் செல்வாக்குள்ள பொழுதுபோக்குக் கலையாக வியாப்பித்துள்ளதை இவ்விவாதம் உறுதிசெய்கின்றது.

பயன்பட்ட நூல்கள்

1. எட்கர் தர்ஸ்டன், 1987: *தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்*, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். ப.593.
2. Carles Annandale; 1920: The concise English Dictionary – Literary Scientific and Technical, Blackie & Sons Ltd., P.696.
3. Humbly, W.D; 1925: The History of Tattooing and its Significance, H.F.&G. Withereby, London. P.20.
4. பவுன்துரை, இராசு; 2004: *தமிழக ஓவியக்கலை மரபும் பண்பாடும்*, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம். ப.69.
5. பவுன்துரை, இராசு; 2004: *தமிழக ஓவியக்கலை மரபும் பண்பாடும்*, ப.71.
6. கலித்தொகைப் பாடல்கள்: 18-3, 24-15, 54-12, 63-8, 64-8, 76-15, 97-12, 111-17, 117-4, 125-8, 142-44, 143-33, 144-34.
7. மீனாட்சி சுந்தரம், கா; 2009: கொங்கு நாட்டில் உடலில் வரைதல் கலை, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை. ப.48.
8. பரிமணம் அ.மா. பாலசுப்பிரமணியன்; நான்காம் பதிப்பு 2011: *குறுந்தொகை மூலமும் உரையும்*, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை. ப.650.

********* ********* ********** ********* ********* ********** ********** **********